கொல்கத்தா சர்வதேச விமான நிலையத்தில் விமானங்களை பழுதுபார்க்கும் மையம் உள்ளது. அங்கு நீண்ட நாட்களாக நிறுத்தப்பட்டிருந்த பழைய விமானம் தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. அந்த விமானத்தின் பாகங்கள் நேற்று லாரியில் எடுத்துச் செல்லப்பட்டன. படம்: பிடிஐ

வங்கதேசத்தின் 53-வது சுதந்திர தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி மேற்கு வங்க மாநிலம் சிலிகுரி புறநகர்ப் பகுதியில் இனிப்புகளை பரிமாறிக் கொள்ளும் வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படையினர் (பிஜிபி), இந்திய எல்லையோர பாதுகாப்புப் படை வீரர்கள் (பிஎஸ்எஃப்). படம்: பிடிஐ

கடற்படை தளத்தை தாக்க முயன்ற

4 பேரை சுட்டுக் கொன்ற பாகிஸ்தான் ராணுவம்

தற்கொலைப் படையினரின் தாக்குதலில் 5 சீனர்கள் உயிரிழப்பு

● புதுடெல்லி

பாகிஸ்தானின் 2-வது பெரிய கடற்படை தளம் மீது தாக்குதல் நடத்த முயன்ற 4 பேரை அந்நாட்டு ராணுவம் சுட்டுக் கொன்றது. இந்த தாக்குதலுக்கு பலுசிஸ்தான் பிரிவினைவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம் துர்பத் நகரில் பிஎன்எஸ் சித்திக் கடற்படை தளம் அமைந்துள்ளது. அங்கு சீனாவின் ட்ரோன்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், பிஎன்எஸ் சித்திக் கடற்படை தளத்துக்குள் நேற்று முன்தினம் இரவு 4 மர்ம நபர்கள் நுழைய முயன்றுள்ளனர். இதையடுத்து, சுதாரித்துக்கொண்ட கடற்படை வீரர்கள் ஊடுருவல் முயற்சியை முறியடித்துள்ளனர்.

இதுகுறித்து இன்டர் சர்வீசஸ் பப்ளிக் ரிலேஷன் (ஐஎஸ்பிஆர்) வெளியிட்டுள்ள அறிக்கையில், "பிஎன்எஸ் சித்திக் கடற்படை தளத்தின் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் முயற்சி செய்தனர். இதையடுத்து, உஷாரான கடற்படையினர், அருகில் இருந்த பாதுகாப்புப் படையினரை வரவழைத்தனர். தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் ஒரு வீரரும் அனைத்து (4) தீவிரவாதிகளும் உயிரிழந்தனர். இதன்மூலம் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டது" என கூறப்பட்டுள்ளது.

பிஎல்ஏ பொறுப்பேற்பு

இதனிடையே இந்த தாக்குதல் சம்பவத்துக்கு பலுசிஸ்தான் லிபரேஷன் ஆர்மி (பிஎல்ஏ) என்ற பிரிவினைவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. பலுசிஸ்தான் பகுதியை தனி நாடாக அறிவிக்கக் கோரி இந்த அமைப்பு போராடி வருகிறது. குறிப்பாக இப்பகுதியில் சீனா முதலீடு செய்வதை எதிர்க்கும் வகையில் இந்த தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

பிஎல்ஏ பிரிவினைவாத அமைப்பு இந்த ஆண்டில் நடத்தும் 3-வது தாக்குதல் இதுவாகும். இதற்கு முன்னதாக கடந்த 20-ம் தேதி சீனாவின் நிதியுதவியால் செயல்படும் க்வதார் துறைமுகத்துக்கு வெளியே உள்ள ராணுவ புலனாய்வு தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்தினர். அப்போது பாதுகாப்புப் படையினருக்கும் பிஎல்ஏ அமைப்பினருக்கும் இடையே நடந்த சண்டையில் 2 பாகிஸ்தான் வீரர்கள் மற்றும் 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதற்கு முன்பு ஜனவரி 29-ம் தேதி மாக் நகரில் தாக்குதல் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வடமேற்கு பாகிஸ்தான் பகுதி வழியாக நேற்று வந்த சீன பாதுகாப்பு வாகனங்கள் மீது தற்கொலைப் படை நடத்திய தாக்குதலில் 5 சீனர்கள் உயிரிழந்ததாகத் தெரியவந்துள்ளது.

கேஜ்ரிவாலுக்கு ரூ.134 கோடி கொடுத்தோம்

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் தகவல்

● புதுடெல்லி

டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலுக்கு ரூ.134 கோடி கொடுத்தோம் என்று காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னு குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 2007-ம் ஆண்டில் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 'சீக்கியருக்கான நீதி' அமைப்பு தொடங்கப்பட்டது. காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவான இந்த அமைப்பு இந்தியாவில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதனால் கடந்த 2019-ம் ஆண்டில் இந்த அமைப்புக்கு மத்திய அரசு தடை விதித்தது.

அமெரிக்காவில் வசித்து வரும் இந்த அமைப்பின் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னு அண்மையில் வெளியிட்ட வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது:

கடந்த 2014-ம் ஆண்டில் கேஜ்ரிவால் அமெரிக்காவின் நியூயார்க் நகருக்கு வந்தார். அப்போது அவர் டெல்லி முதல்வராக பதவி வகிக்கவில்லை. காலிஸ்தான் குழுக்களின் தலைவர்களை நியூயார்க்கில் அவர் சந்தித்துப் பேசினார்.

↑ டெல்லி முதல்வர் கேஜ்ரிவாலுக்கு ரூ.134 கோடி வழங்கியதாக வீடியோ பதிவின் மூலம் குற்றம் சாட்டிய குர்பத்வந்த் சிங் பன்னு.

டெல்லி முதல்வராக பதவியேற்ற 5 மணி நேரத்தில் காலிஸ்தான் ஆதரவாளர் தேவிந்தர் பால் புல்லரை சிறையில் இருந்து விடுதலை செய்வேன் என்று கேஜ்ரிவால் உறுதி அளித்தார்.

இதற்காக கடந்த 2014-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு வரையிலான காலத்தில் காலிஸ்தான் குழுக்கள் தரப்பில் கேஜ்ரிவாலுக்கு ரூ.133.54 கோடி வழங்கப்பட்டது. ஆனால் எங்களுக்கு அவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

பஞ்சாப் முதல்வரும் ஆம் ஆத்மி மூத்த தலைவருமான பகவந்த் மான் சிங் தற்போது காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். நாங்கள் அளித்த பணத்தை மூலதனமாக கொண்டே பஞ்சாபில் ஆம் ஆத்மி ஆட்சி அமைத்திருக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

2-வது உத்தரவு

டெல்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள அர்விந்த் கேஜ்ரிவால், சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தீர்த்து வைக்குமாறு அமைச்சர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இது சிறையில் இருந்து அவர் பிறப்பித்த 2-வது உத்தரவாகும்.

முன்னதாக கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, டெல்லியில் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு தனது முதல் உத்தரவை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



↑ உ.பி. மாநிலம் அயோத்தியிலுள்ள பாலராமர் கோயிலில் ராங்கோத்சவ நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற பூஜையின்போது பாலராமருக்கு மலர்களால் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்கள். படம்: பிடிஐ

அடல் பென்ஷன் திட்டம் குறித்து ஜெய்ராமுக்கு தெரியவில்லை

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில்

● புதுடெல்லி

அடல் பென்ஷன் திட்டம் (ஏபிஒய்) மிகவும் மோசமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறினார். மேலும், அது ஒரு காகிதப் புலியாக மட்டுமே உள்ளது என்றும் அதனால் சந்தாதாரர்களுக்கு எந்தவித பயனுமில்லை என்றும் கூறியிருந்தார்.

இதுகுறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது எக்ஸ் வலைதளத்தில் அளித்துள்ள பதில்:

நல்ல ஓய்வூதிய திட்டத்தை வடிவமைப்பதற்கான அடிப்படை கொள்கை என்ன என்பது ஜெய்ராம் ரமேஷுக்கு தெரியவில்லை. அடல் பென்ஷனில் உள்ள நல்ல பயன்களைமறைக்கசூழ்ச்சியானவார்த்தைகளை அவர் பயன்படுத்துகிறார். உண்மையில் அவர் ஏழைகள் பயன்பெறுவதை விரும்பவில்லை.

ஏபிஒய் திட்டத்தில் சந்தாதாரர் விலகும் வரை பிரீமியம் பேமண்டை தொடரும் வகையில் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் பலரை சரியான முடிவு எடுக்கவும், சேமிக்கவும் தூண்டுகிறது.

இத்திட்டத்தில் குறைந்தபட்சம் வருமானம் 8 சதவீதமாக இருக்கும். இதற்கு மத்திய அரசு உத்தரவாதமளிக்கிறது. அதிக முதலீட்டு வருமானம் பெறப்பட்டால் சந்தாதாரர்களுக்கு அதிக ஓய்வூதியம் வழங்கப்படும்.

இவ்வாறு நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்க கூடாது

நாடு கடத்தல் விவகாரத்தில் அமெரிக்க அரசிடம் உத்தரவாதம் கோரும் பிரிட்டிஷ் நீதிமன்றம்

● லண்டன்

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இதுகுறித்து 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவை சேர்ந்த செய்தியாளர் ஜூலியன் அசாஞ்சே (52) கடந்த 2006ம் ஆண்டில் விக்கிலீக்ஸ் என்ற இணையதளத்தை தொடங்கினார். கடந்த 2010-ல் ஆப்கானிஸ்தான், இராக் போர் தொடர்பான ரகசிய ஆவணங்கள் இந்த இணையதளத்தில் வெளியாகின. இதில் அமெரிக்க ராணுவத்தின் பல்வேறு ரகசியங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

இந்த சூழலில் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்ய கடந்த 2010-ம் ஆண்டு நவம்பரில் சுவீடன் நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்தது. கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க கடந்த 2012-ம் ஆண்டில் பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் அவர் தஞ்சமடைந்தார். கடந்த 2019-ம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈகுவடார் அரசு வாபஸ் பெற்றது. இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் போலீஸார், ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்தனர். கடந்த 5 ஆண்டுகளாக தெற்கு லண்டனில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டு உள்ளார்.

அமெரிக்காவை உளவு பார்த்தது, ராணுவ ரகசியங்களை திருடியது உட்பட 17 குற்றச்சாட்டுகளை அசாஞ்சே மீது அந்த நாட்டு அரசு சுமத்தி உள்ளது. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று அவரை நாடு கடத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகம் கடந்த 2022-ம் ஆண்டு ஜூனில் ஒப்புதல் அளித்தது.

↑ ஜூலியன் அசாஞ்சே

இதுதொடர்பான வழக்கு லண்டனில் உள்ள உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் விசாரித்து நேற்று முக்கிய உத்தரவினைப் பிறப்பித்தார்.

"ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படாது என்று அந்த நாட்டு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அவரது கருத்து சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அமெரிக்க குடிமகனுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உரிமைகளை ஆஸ்திரேலியாவை சேர்ந்த அசாஞ்சேவுக்கும் வழங்க வேண்டும். அவர் மீதான வழக்கு விசாரணை நேர்மையாக நடைபெற வேண்டும். இவை குறித்து 3 வாரங்களுக்குள் அமெரிக்க அரசு பதில் அளிக்க வேண்டும். இல்லையென்றால் தொடர்ச்சியாக விசாரணை நடைபெறாது. அமெரிக்காவுக்கு நாடு கடத்தக் கோரும் வழக்கை எதிர்த்து மேல் முறையீடு செய்ய அசாஞ்சேவுக்கு அனுமதிவழங்கப்படும்" என்றுநீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டார். இவ்வழக்கின் அடுத்த விசாரணை மே 20-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதுகுறித்து ஜூலியன் அசாஞ்சேவின் மனைவி ஸ்டெல்லா கூறும்போது, "எனது கணவருக்கு தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்திருக்கிறது. இந்த வழக்கை அமெரிக்க அரசு கைவிட வேண்டும். இதற்கான உத்தரவை அதிபர் பைடன் பிறப்பிக்க வேண்டும்" என்று தெரிவித்தார். பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் முன்னாள் தலைவர் ஜெர்மி கார்பின் கூறும்போது, "அசாஞ்சேமீதானவழக்குகளை அமெரிக்க அரசு கைவிட வேண்டும்" என்று கோரினார்.

suganthi.r.hindutamil@hindutamil.co.in

அமெரிக்காவில் கப்பல் மோதி பாலம் இடிந்து விபத்து

நீரில் மூழ்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரம்

● வாஷிங்டன்

அமெரிக்காவின் பால்டிமோர் நகரத்தில் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய பாலம் சிங்கப்பூருக்கு சொந்தமான சரக்கு கப்பல் மோதியதில் நேற்று இடிந்து விழுந்தது. நீருக்குள் மூழ்கியவர்களை தேடும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதுதொடர்பான வீடியோ கட்சி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இதுகுறித்து பால்டிமோர் காவல் துறை செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:

படாப்ஸ்கோ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் சரக்கு கப்பல் மோதி இடிந்து விழுந்த சம்பவம் நள்ளிரவில் தெரியவந்தது. இதையடுத்து விரைந்து சென்று அங்குள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தபோது கப்பல் மோதியதில் பாலத்தின் ஒவ்வொரு பகுதியாக அடுத்தடுத்து இடிந்து விழும் காட்சிகள் அதில் பதிவாகியிருந்தது. மேலும் இந்த சம்பவத்தின்போது பாலத்தில் ஏராளமான வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. அவற்றுடன் சேர்த்து டிராக்டர்-டிரெய்லரும் ஆற்றுக்குள் விழுந்தது. நீரில் மூழ்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.



↑ அமெரிக்கா மேரிலேண்டின் பால்டிமோர் நகரில் உள்ள பிரான்சிஸ் ஸ்காட் பாலத்தின் மீது சிங்கப்பூருக்கு சொந்தமான கன்டெய்னர் கப்பல் நேற்று எதிர்பாராதவிதமாக மோதியதில் உருக்குலைந்து ஆற்றுக்குள் மூழ்கி கிடக்கும் பாலத்தின் பாகங்கள். படம்: பிடிஐ

இவ்வாறு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

படாப்ஸ்கோ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட இந்தப் பாலம் கடந்த 1977-ல் திறந்து வைக்கப்பட்டது. சுமார் 1.6 மைல் (2.6 கிலோமீட்டர்) தொலைவுக்கு நான்குவழிப் பாதையாக உருவாக்கப்பட்ட இந்தப் பாலத்தை ஆண்டுக்கு 11 மில்லியன் அதாவது 1.10 கோடிக்கும் அதிகமான வாகனங்கள் கடந்து செல்கின்றன.

வாஷிங்டனுக்கு அடுத்தபடியாக அமெரிக்க கிழக்கு கடற்கரையில் உள்ள தொழில் நகரமான பால்டிமோரை சுற்றியுள்ள சாலைப் போக்குவரத்தின் முக்கிய இணைப்பு மையமாக இந்த பாலம் விளங்கியது.

இது, இடிந்து விழுந்ததையடுத்து வாகன ஓட்டிகள் மாற்றுப்பாதையில் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிக கோடீஸ்வரர் வசிக்கும் நகரம்: பெய்ஜிங்கை பின்னுக்கு தள்ளி 3-ம் இடம் பிடித்தது மும்பை

● புதுடெல்லி

உலகளாவிய பில்லியனர்களின் (கோடீஸ்வரர்கள்) விவரங்களை ஆய்வு நிறுவனமான ஹுரூன் வெளியிட்டுள்ளது. இவ்வாண்டு ஜனவரி மாத நிலவரப்படி, உலக அளவில் ரூ.8,300 கோடிக்கு மேல் சொத்து மதிப்பு கொண்ட பில்லியனர்களின் எண்ணிக்கை 3,279 ஆக உள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 167 பேர் இந்தப் பட்டியலில் புதிதாக இணைந்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் 814 பேருடன் முதல் இடத்தில் சீனா உள்ளது. இரண்டாம் இடத்தில் அமெரிக்காவும் (800), 3-வது இடத்தில் இந்தியாவும் (271) உள்ளன.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவில் 109 பேரும், இந்தியாவில் 94 பேரும் பில்லியனர் பட்டியலில் புதிதாக இணைந்துள்ளனர். அதிக பில்லியனர்களைக் கொண்ட நகரங்களின் வரிசையில் சீனத் தலைநகர் பெய்ஜிங்கை பின்னுக்குத் தள்ளி மும்பை 3-ம் இடம்பிடித்துள்ளது. முதல் இடத்தில் நியூயார்க், 2-ம் இடத்தில் லண்டன் உள்ளன. 92 பில்லியனர்களைக் கொண்டு மும்பை 3-ம் இடத்திலும், 91 பில்லியனர்களைக் கொண்டு பெய்ஜிங் 4-ம் இடத்திலும் உள்ளன. 9-வது இடத்தில் டெல்லி உள்ளது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மும்பையில் 26 பில்லியனர்கள் புதிதாக உருவாகியுள்ளனர்.

SALE NOTICE
PADMAADEVI SUGARS LIMITED
(In Liquidation)
CIN: U15421TN1995PLC029913
Reg. Off.: 106, Palayasivaram Village Kancheepuram - 631606
Liquidator: CHANDRAMOULI RAMASUBRAMANIAM
(C Ramasubramaniam, Insolvency Professional)
Liquidator Address: 'RAJI' 3B1, 3rd Floor, Gaiety Palace, No. 1L, Blackers Road, Mount Road, Chennai - 600002
Email: srinidhicra@gmail.com/fcs.rms@gmail.com
Telephone No: +91 9884068292 | +91 9962568292 | 044-28528292
Registration No: IBBI/IPA-002/IP-N00052/2016-17/10096

E- Auction
Sale of Assets under Insolvency and Bankruptcy Code, 2016
Date and Time of Auction: Monday, 29th April 2024 at 02.00 P.M to 03.00 P.M
(With unlimited extension of 5 minutes each)

Notice is hereby given to the public in general under Insolvency and Bankruptcy Code, 2016 and the regulations made there under with respect to sale of assets and properties owned by M/s. **PADMAADEVI SUGARS LIMITED** (In Liquidation) forming part of Liquidation Estate by the Liquidator, appointed by the Hon'ble National Company Law Tribunal, Chennai Bench vide order IA/649/IB/2020 IN CP/768/IB/2018 dated 20th April 2021. The bidding of the asset stated in the below table shall conducted by the undersigned through the e-auction platform **WWW.BANKAUCTIONS.IN**

Asset	Reserve Price ₹	Earnest Money Amount ₹
BATCH 1		
LOT 1: **ASSET NO.1: LAND AND BUILDING** Factory Land and Building situated at Chengalpattu – Kancheepuram Road, No. 106, Palayasivaram Village, Walajabad Taluk, Kancheepuram-631606 admeasuring **total land extent of 88.83 acres.**	116,28,32,500	11,62,83,250
ASSET NO.2: PLANT AND MACHINERIES Plant and Machineries situated Chengalpattu – Kancheepuram Road, No. 106, Palayasivaram Village, Kancheepuram-631606. The following table shows the description of Plant and Machineries:	47,44,49,000	4,74,44,900
Total	163,72,81,500	16,37,28,150

S.NO	Unit	Capacity
1	Sugar Mill - A	2500 Tons Per Day
2	Sugar Mill - B	6500 Tons Per Day
3	Cogeneration Power Plant	15 MW
4	Cogeneration Power Plant	27.3 MW
5	Distillery Unit	100 KLPD

Terms and Condition of the E-Auction are as under:
1. **The above properties have been attached under the provisions of Prohibition of Benami Property Transaction Act, 1988 ("Benami Act") and an appeal has been filed challenging the attachment before Hon'ble Supreme Court of India.**
2. E-Auction will be conducted on **"AS IS WHERE IS", "AS IS WHAT IS" AND "WHATEVER THERE IS BASIS" and "WITHOUT RECOURSE BASIS"** as such sale is without any kind of warranties and indemnities through approved service provider M/s. 4CLOSURE via **www.bankauctions.in**
3. The auction comprises of 1 batch, wherein the entire assets are being auctioned in one Batch (Lot 1).
4. This sale notice shall be read with Complete E-Auction process document containing details of the Assets, the bidding process, the document to be submitted and the general terms and conditions of online auction sale which are available on websites link www.bankauctions.in
5. The highest offer received from E-Auction will be declared as successful bid. The Liquidator reserves the right to choose in announcing the successful bidder based on the highest bid received.
6. The EMD can be submitted through Demand draft /NEFT/RTGS in the account of **PADMAADEVI SUGAR LIMITED IN LIQUIDATION, A/c. No. 800920110000442, Bank and Branch: Bank of India and Egmore Branch; IFSC Code: BKID0008009.**
7. The Bids along with complete bid documents and evidence of deposit of EMD can be submitted through email or can be submitted at the Liquidator's office at addresses mentioned above before 6.00 P.M on **Friday, 26th April, 2024.** The bid form can be downloaded from the website of **WWW.BANKAUCTIONS.IN**
8. Last date and time of submission of EMD & bid related document mentioned in the Tender documents is **6.00 p.m. on, Friday, 26th April, 2024.**
9. The date and time of e-Auction on **Monday, 29th April 2024 between 02.00 P.M and 03.00 P.M.**
10. If any bid is made within the last 5 minutes of closure time, the biding time will be extended automatically by another 5 minutes and if no higher bid is received within in the extended 5 minutes, the auction will automatically get closed at the extended 5 minutes.
11. The intended bidder who have deposited EMD and require assistance in creating login id and password may contact the liquidator office on phone +91 9884068292 through email at srinidhicra@gmail.com and for technical support, you can contact Mr. T Jaya Prakash Reddy @ 8142000064
12. The EMD amount of unsuccessful Bidders will be refunded within one week. The EMD shall not bear any interest.
13. The bidder who submits highest offer (more than Reserve Price) on closure of online auction shall be declared successful bidder subject to approval by the Liquidator. The liquidator reserves his rights to reject any or all of the offers or accept offer for one or more properties received without assigning any reasons whatsoever at any stage.
14. In the event, if none of the intended bidders participating in the e-auction has increased the bid amount, the EMD amount deposited by the bidders shall be forfeited.
15. Upon confirmation of sale, the purchaser shall deposit 25% of sale price (including EMD) immediately and the balance sale consideration within 90 days of the date of such demand, provided that payment made after 30 days shall attract interest at the rate of 12% as as per Sub-clause 12 of Clause 1 of Schedule I of IBBI (Liquidation Process) Regulations 2016 as amended from time to time.
16. The sale shall be cancelled if the payment is not received within 90 days and the amount paid will be forfeited. For more particulars about e-auction, the bidders are requested to go through the tender form thoroughly.
17. To the best of knowledge and information of the Liquidator, there are encumbrances on the property. However, the intending bidder should make their own independent enquiries regarding the encumbrances, title of property put on auction and claims/ rights/duties affecting the property prior to submitting their bid. The E-Auction advertisement does not constitute and will not be deemed to constitute any commitment or any representation of the Liquidator.
18. The highest bidder would bear the applicable GST, charges/ fees payable for ownership transfer, registration fee including applicable rate of stamp duty etc., as applicable under law. The Liquidator will not be responsible for any charge, lien under sale. The Liquidator has absolute right to accept or reject the bid or adjourn, postpone, extend the auction without assigning any reasons whatsoever. No objections will accrue to the Liquidator in such an event.
19. The intending bidders, prior to submitting their bid, should make their independent inquiries regarding the title of property, dues of local taxes, electricity and water charges, maintenance charges, if any and inspect the property at their own expenses and satisfy themselves. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior intimation to Mr. C. Ramasubramaniam, Liquidator (+91 9884068292) and with a written request.
20. Further inquiries, if any and/or terms and conditions for sale can be obtained from the Liquidator office at phone numbers mentioned above.
21. The advertisement will be valid for 90 days from the date of advertisement. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam (+91 9884068292)

Date: 27.03.2024
Place: Chennai

Sd/-
CHANDRAMOULI RAMASUBRAMANIAM
(C.RAMASUBRAMANIAM)
Liquidator-Padmaadevi Sugars Limited
'Raji', 3B1, 3rd Floor, Gaiety Palace,
No. 1L, Blackers Road, Mount Road, Chennai-600002
Email: srinidhicra@gmail.com/ fcs.rms@gmail.com
Contact No: 9884068292/9962568292